



பொதுவாகத் தீவிரவாத இயக்கங்களுக்கு எல்லாம் பேர்தான் பெத்தபேராக இருக்குமே தவிர, உள்ளுக்குள் பரம ஏழைகளாக இருப்பார்கள். கூப்பிட்டு ஒரு கவர்மெண்ட் உத்தியோகம் கொடுத்தால், துப்பாக்கியையெல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு, சமர்த்தாகக் கைகட்டிக்கொண்டு ஃபைல் பார்க்கக்கூடிய ஆசாமிகள் நிறைந்த இயக்கங்கள், உலகம் முழுக்க நிறைய உண்டு. கொள்கை, கோட்பாடு எல்லாம் இருக்கும்தான். ஆனால், ஆதியிலிருந்து உடன் வந்த வயிறு என்று ஒன்று கூடவே இருக்குமல்லவா?

மனோதத்துவ ரீதியில், பல தனி நபர்கள் தனித்தனியே ஒரே விதமாக பாதிக்கப்பட்டுத்தான், இம்மாதிரி களேபரக்காரர்கள் ஆகிறார்கள் என்று ஒரு தியரி இருக்கிறது. உதாரணத்துக்கு, நமது வட கிழக்கு மாநிலங்களில் இயங்கிவரும் இயக்கங்களை எடுத்துக்கொள்ளுங்கள். உல்ஃபா கொஞ்சம் பெரிசு. பேர் தெரியும், கேள்விப்பட்டிருப்பீர்கள். இன்னும் கொஞ்சம் விவரமானவர்களுக்கு National Socialist Council of Nagaland, All Tripura Tiger Force, Arunachal Dragan Force, People Liberation Front of Meghalaya என்று இன்னும் கொஞ்சம் பெயர்கள் தெரிந்திருக்கலாம். இவையெல்லாம் தவிர, மேலும் சுமார் முப்பது கோஷ்டிகள் அந்த ஏழு மாநிலங்களில் ஜிந்தாபாத் அல்லது முர்தாபாத் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

சீனியர் குழுக்களுக்கு அவ்வப்போது வேண்டப்பட்ட உதவி ஒத்தாசைகள் செய்வது, எங்காவது சந்து பொந்துகளில் பட்டாசு வைத்து, சில்லறைப் புரட்சிகள் செய்வது, கட்டப்பஞ்சாயத்து என்று பிழைப்பை ஓட்டும் இக்குழுக்கள், எப்போதாவது அரசுத் தரப்பில் பேச்சுவார்த்தைக்குக் கூப்பிட்டால் உடனே ஆஜராகிவிடுவார்கள். துப்பாக்கிகளைக் கீழே போட்டுவிட்டு பேப்பர் போட்டோக்களுக்கு போஸ் கொடுப்பார்கள். கவர்மெண்ட் உத்தியோகம் இல்லாவிட்டாலும், கிடைக்கிற வரை லாபம் என்று திருப்தியடைந்துவிட்டு, தேசிய நீரோட்டத்தில் அவ்வப்போது கலந்துவிடுவார்கள். மீண்டும் கோபம் வந்தால் மீண்டும் துப்பாக்கி.

இந்தியாவில் மட்டுமல்ல. உலகம் முழுக்கவே இம்மாதிரியான பகுதிநேரத் தீவிரவாதக் குழுக்கள் நிறைய உண்டு. திடீரென்று நம்மூர் கிரிமினல் சந்தன வீரப்பன், தமிழ்த் தீவிரவாதியாகப் புதிய அவதாரம் எடுக்கவில்லை? அந்தமாதிரி.

இந்த வகையில், உலகில் உள்ள வேறெந்தத் தீவிரவாத இயக்கத்துடனும் ஒப்பிடவே முடியாத ஓர் அமைப்பு உண்டென்றால், அது அல் காயிதா மட்டுமே. அடிப்படையிலேயே மிகமிகப் பணக்கார அமைப்பு அது. அல் காயிதாவின் நிதி என்பது, இரண்டு விதங்களில் வருவது. முதலாவது, புரவலரும் தலைவரும் தளபதியும் எல்லாமும் ஆன ஒசாமா பின்லேடனின் வற்றாத சொத்து. இன்னும் நாற்பது தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு, அவரது தகப்பனார் சேர்த்துவைத்துவிட்டுப் போய்விட்டபடியால், பணப்பிரச்னை என்பது அவருக்கு அறவே கிடையாது.

ஆனால், ஒரு கணக்கு வைத்துக்கொண்டிருக்கிறார் ஒசாமா. வசூல் மூலம் ஒரு வருஷத்துக்கு எத்தனை பணம் தேறுகிறதோ, அதனைப்போல் ஐந்து மடங்கு தன் பங்காக அவர் இயக்கத்துக்குத் தருவார். ஆக, அல் காயிதாவில் வசூலுக்கு முக்கிய இடம் உண்டு. இந்த வசூல் என்பது நமது தலைவர்கள் பிறந்த நாள் சமயத்தில் வசூலிப்பது போன்றதுதான். ஆனால், வருடம் ஒருமுறை நடப்பதல்ல; வருடம் முழுவதுமே. மிகவும் டெக்னிகலாக, திட்டமிடப்பட்ட, ஊர்வாரி, மாகாணவாரி, தேச வாரி, கண்ட வாரி வசூல். இதற்காகவே நன்கு படித்த, மிக நன்றாகப் பேசத் தெரிந்த மார்க்கெட்டிங் ஆபீஸர்கள் அல் காயிதாவில் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஏரியா ஒதுக்கிக்கொடுத்து, வருஷத்துக்கு இத்தனை என்று டார்கெட் நிர்ணயித்து, டார்கெட்டைத் தாண்டுபவர்களுக்கு இன்ஸெண்டிவ் எல்லாம் கொடுத்து பக்காவாக வைத்திருக்கிறார்கள். மிகையே இல்லை. இப்படித்தான் நடக்கிறது. அல் காயிதாவின் மார்க்கெட்டிங் ஆபீஸர்களை ஏகே - 47 தூக்கிக்கொண்டு தலையில் முண்டாசும் முகத்தில் மூணு மண்டல கால தாடியுமாக தயவுசெய்து கற்பனை செய்துவிடாதீர்கள். ஒரு பன்னாட்டு நிறுவன மார்க்கெட்டிங் ஆபீஸர் எப்படி இருப்பாரோ, அப்படித்தான் இவர்களும் இருப்பார்கள். ஊருக்கேற்ற வேஷம். வேலைக்கேற்ற கோஷம். என்ன விசேஷம் என்றால், இவர்கள் யாரும் 'அல் காயிதாவுக்கு நிதி கொடுங்கள்' என்று கேட்கமாட்டார்கள். 'உலகம் முழுக்க லட்சக்கணக்கான முஸ்லிம்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு உதவி செய்யுங்கள்' என்றுதான் கோரிக்கை வைப்பார்கள். முஸ்லிம் சமூகத்தவர்கள்தான் இதற்குப் பெரும்பாலும் நிதியளிப்பார்கள் என்றபோதும், ஜெர்மனி, பெல்ஜியம் போன்ற சில தேசங்களில் முஸ்லிம் அல்லாதவர்களும் ரெகுலராக நிதியளித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இதில் வேறு பல நுணுக்கங்களும் இருக்கின்றன. நிதி கேட்பவர்கள் அல் காயிதாவுக்காகத்தான் கேட்கிறார்கள் என்று தெரிந்தே சிலர் அளிப்பார்கள். அவர்களுக்கெல்லாம் அல் காயிதாவைப் பிடித்துத்தான் இருக்கவேண்டும் என்கிற அவசியம் கூட இல்லை. அமெரிக்காவைப் பிடிக்காதிருந்தாலே போதும். அது கூட இல்லாமல், பின்லேடனை ஒரு ஹீரோவாக நினைத்துச் சில்லறை வாரிவிடும் விசிலடித்தான் குஞ்சுகளும் உலகம் முழுக்கப் பலபேர் இருக்கிறார்கள்.

இதெல்லாம் ஐரோப்பிய நாடுகளிலும், கனடா மற்றும் அமெரிக்காவிலும் உள்ள நிலவரம். இது தவிர, இன்னும் சில வழிகளிலும் அல் காயிதா தனக்கான நிதியைத் திரட்டுகிறது. முதலாவது, ஒசாமா பின்லேடனின் முதலீடுகள். அப்பா சொத்தை உட்கார்ந்து கரைக்கிற ஜாதி இல்லை அவர். மாறாக, தன் தந்தை இறந்தபிறகு, தனக்குக் கிடைத்த பங்குகளை லேடன் க்ரூப் கம்பெனிகளில் முதலீடு செய்தது போக, மிச்சமிருந்த தொகையை உலகின் பல்வேறு பாகங்களில், பல்வேறு தொழிற்சாலைகளில் மிகுந்த புத்திசாலித்தனமுடன் பினாமி பெயர்களில் முதலீடு செய்திருக்கிறார்.

இது தவிர, அவரே முதல் போட்டு ஆரம்பித்த தொழிற்சாலைகளும் அநேகம் உண்டு. குறிப்பாக, 1991 ரூ 96 காலகட்டங்களில் சூடானிலும் பாகிஸ்தானிலும் தான்சானியாவிலும் பல தொழிற்சாலைகளை பின்லேடன் கட்டினார். உள்ளூர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்கிறபடியால், அந்தந்த தேசத்து அரசுகள் இதற்கு மறைமுக ஆதரவு தெரிவித்தன. சாதாரண கட்டுமான கம்பெனிகள். ஷூ தயாரிக்கும் கம்பெனிகள். குப்பை வாரி ஊரைச் சுத்தம் செய்யும் க்ளீனிங் கம்பெனிகள். மணல், ஜல்லி சப்ளை செய்யும் நிறுவனங்கள்.

ஊருக்கேற்ற தொழில். ஆட்களுக்கேற்ற வேலை வாய்ப்பு. ஆனால், எல்லாமே ஓரளவு லாபம் தரக்கூடிய தொழில்களாகவே அவர் ஆரம்பித்தார்.

இதுதவிர, வேறு பல நிறுவனங்களில் venture capitalist மாதிரி முதலீடும் செய்திருந்தார். எங்கிருந்து இத்தனை பணம் வருகிறது, யார் பின்னணியில் இருக்கிறார்கள் என்றெல்லாம் கேட்கக் கூடாது. ஷோக்காக டை கட்டிய ஆசாமிகள்தான் வந்து பிசினஸ் பேசுவார்கள். பேலன்ஸ் ஷீட் பார்த்து, கணக்கு வழக்கெல்லாம் கரெக்டாக இருந்தால் முதலீடு கிடைக்கும். எத்தனை கோடிகள் வேண்டுமானாலும் கிடைக்கும். ஒழுங்காக வட்டியுடன் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அது முக்கியம்.

அல் காயிதாவின் இன்னொரு பணம் வரும் வழி, ஹவாலா. பாகிஸ்தான், துபாய் உள்ளிட்ட சில தேசங்களுக்கு இடையே, ஹவாலா முறைப்படி பணப் பரிமாற்றம் செய்து, அதில் கிடைக்கும் கமிஷன் தொகையை இயக்கத்துக்காகப் பயன்படுத்துவார்கள். 1998-ல் கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள கென்யாவிலும் தான்சானியாவிலும் இருந்த அமெரிக்கத் தூதரகங்களை வெடிவைத்துத் தகர்க்கும் முயற்சி மேற்கொள்ளப்படும் முன்னர்வரை, வங்கிகள் மூலம் இத்தகைய பணப் பரிமாற்றம் செய்வதில், அல் காயிதாவுக்குப் பெரிய பிரச்னை ஏதும் இருக்கவில்லை. ஆனால், தூதரகத் தகர்ப்பு முயற்சிகளுக்குப் பிறகு, சர்வதேச அளவில் அல் காயிதாவுக்குப் பல நெருக்கடிகள் ஏற்பட்டு, அதன் வங்கிப் பயன்பாடு முற்றிலுமாக நிறுத்திக்கொள்ளப்பட்ட பிறகு, இந்த ஹவாலா முறை சற்றே தொய்ந்துபோனது.

இதெல்லாம் தவிர, இன்னொரு வழியும் உண்டு. பங்குச் சந்தை. இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய இரண்டு தேசங்களின் பங்குச் சந்தையில் அல் காயிதா விளையாடியிருப்பதற்கான ஆதாரங்கள் நிறைய கிடைத்திருக்கின்றன. இதே நாடுகளில் பல நட்சத்திர ஓட்டல்கள் கட்டி, அதன்மூலமும் பணம் பண்ணியிருக்கிறார்கள்.

தவிரவும், கிரெடிட் கார்ட் மோசடி. இதில் அல் காயிதா மார்க்கெட்டிங் டீம், படு கெட்டி. பணக்கார ஐரோப்பிய நாடுகளைக் குறிவைத்து இந்த வேலையை அவர்கள் செய்கிறார்கள். இங்கிலாந்தில் கொஞ்சம் அதிகம்.

அல் காயிதாவின் வழக்கப்படி, இங்கிலாந்தில் இந்த வேலையைச் செய்வது அல் காயிதாவின் இங்கிலாந்துப் பிரிவு அல்ல. மாறாக, அல்ஜீரியாவிலிருந்து இதற்கென்றே பயிற்சி அளிக்கப்பட்டு, இங்கிலாந்துக்குக் கொண்டுவந்து 'தொழில்' செய்ய விடப்பட்ட ஒரு மாபெரும் கூட்டமே இருக்கிறது. இவர்கள் மாதத்துக்குக் குறைந்தது ஒரு மில்லியன் டாலர்களாவது கொள்ளையடிக்கிறார்கள் என்று கணக்குக் காட்டுகிறது இங்கிலாந்து அரசு.

பல்வேறு அறக்கட்டளைகள் மூலம் பணம் திரட்டுவது, சுயநிதிக் கல்லூரிகள் நடத்துவது, மருத்துவமனைகள் நடத்துவது என்று அல் காயிதாவின் பண உற்பத்தி இயந்திரத்தின் வேர்கள், கண்ணுக்குத் தெரியாத எல்லைகளுக்கெல்லாம் வியாபித்திருப்பவை.

இப்படிச் சேர்க்கும் பணத்துக்கு முறைப்படி கணக்கு வைத்துக்கொள்வது, அல் காயிதாவில் மிக முக்கியமானதொரு விதியாகவே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. வருடாந்திரத் தணிக்கை உண்டு. ஆடிட்டர் கேள்வி கேட்பார். ஒரு பைசா குறையாமல் கணக்கு ஒப்பித்தாக வேண்டும். யாரும் அத்தனை சுலபத்தில் யானைக்கு அல்வா வாங்கிப் போட்டுவிட முடியாது! (தொடரும்)

அல் காயிதாவின் ஈராக் பிரிவு தளபதி, அபூ மூசாப் அல் ஜர்காவி (Abu Musab al – zarqawi) அமெரிக்க வீரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டான் என்கிற செய்தியால், கடந்த வியாழக்கிழமை செய்திப் பத்திரிகைகள் சாபல்யமடைந்தன. (பலபேர் ஜர்காவியை ஜவாஹிரியுடன் போட்டுக் குழப்பிக்கொண்டு, அல் காயிதாவின் முதன்மை தளபதியைச் சுட்டுவிட்டார்கள் என்று அலறினார்கள்!)

மீடியா இத்தனை உரக்கப் பேசுமளவுக்கு ஜர்காவி ஒன்றும் ரொம்பப் பெரிய ஆள் இல்லை. மிகவும் சாதாரணமான லோக்கல் ரவுடிதான். 2004-ம் ஆண்டு வரை அவன் பெயர் யாருக்கும் தெரியாது. யாருக்கும் என்பதை அடிக்கோடிட்டுப் படியுங்கள்; ஒசாமா பின்லேடனுக்கே தெரியாது! Tawhid என்கிற பெயரில் ஓர் அமைப்பைத் தொடங்கி, ஈராக்கில் குண்டுபோட்டுக்கொண்டிருந்தவன். சதாம் உசேன் கைது செய்யப்பட்டபிறகு, 'ஏற்பாடு செய்யப்பட்ட' கலவரங்களுக்கு மிகவும் ஒத்தாசையாக இருந்தபடியால், உள்ளூரில் கொஞ்சம் பிரபலமானான்.

ஈராக்கில் அமெரிக்கப் படையின் ஆட்சிதான் உண்மையில் நடக்கிறது என்கிறபடியால், அல் காயிதாவால் நேரடியாக அங்கே எந்தத் திருவிளையாடலையும் நிகழ்த்தமுடியாத சூழ்நிலை. ஆகவே, ஜர்காவியை வாடகைக்கு எடுத்தார்கள். சொல்லிக்கொள்ளும்படி அல் காயிதாவுக்கு இப்போது ஈராக்கில் ஒரு நெட் ஒர்க் இல்லாத காரணத்தால், ஜர்காவியையும் அவனது அடியாட்களையுமே on behalf of al qaeda வேலை செய்யச் சொல்லிவிட்டார்கள். இதனடிப்படையில்தான் ஜர்காவியை அல் காயிதாவின் ஈராக் தளபதி என்று மீடியா சொல்கிறது.

ஆனால், ஜர்காவிக்கு அல் காயிதாவின் தொடர்பும் ஆதரவும் கிடைத்தபிறகு, நிறைய நாசவேலைகளைக் குறுகிய காலத்தில் செய்தான் என்பதை மறுக்கமுடியாது. ஜோர்டனிலும் ஈராக்கிலும் பணியாற்றிக்கொண்டிருந்த பல பெரிய அமெரிக்க அதிகாரிகளைத் தீர்த்துக்கட்டியது, இவனது திருப்பணிகளில் முதன்மையானது. ஈராக்கில் மட்டும் எழுநூறு பேரைப் படுகொலை செய்ததில் ஜர்காவியின் பெயர் சம்பந்தப்பட்டிருக்கிறது.

நவம்பர் 2005-ல் ஜோர்டன் தலைநகர் அம்மானில் நட்சத்திர ஓட்டல்கள் மூன்றில் குண்டு வெடித்துப் பலபேர் இறந்த சம்பவம் நினைவிருக்கிறதா? அது ஜர்காவியின் காரியம்தான். ஜோர்டன் நீதிமன்றம் ஜர்காவிக்குப் பதினைந்து வருட சிறைத்தண்டனை எல்லாம் விதித்து உள்ளே தள்ளியது. தப்பித்து எப்படி வெளியே வந்தான் என்பதை, அவனே ஒரு வாழ்க்கை வரலாறு எழுதியிருந்தால்தான் தெரிந்துகொண்டிருக்க முடியும்!